1973 ஆகஸ்ட் 7] [பேரவைத் தலைவர்]

10—8—1973 அன்று பேரவை மாலையிலும், 4 மணி முதல் 7 மணி வரை கூடும்.

மற்ற அலுவல்கள் ஏற்கெனவே அறிவித்தபடி நடைபெறும்.

(5) அறிக்கை அளித்தல்.

ஆசிரியர்களுக்கு வழங்க இருக்கும் சலுகைகள் குறித்து கல்வி அமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: பேரவைத் தலைவர் அவர்களே, ஹையர் கிரேடு ஆசிரியர்கள், செகண்டரி கிரேடு தகுதி பெற்றும், செகண்டரி கிரேடு பதவிகள் இல்லாத காரணத்தினால், ஹையர் கிரேடு பதவிகளிலேயே பணியாற்றி வருகின்ற நிலையைத் திருத்த, ஒவ்வோர் ஆண்டும் செகண்டரி கிரேடு பதவிகளைப் புதிதாக ஏற்படுத்தித் தரும் கொள்கையை அரசு பின்பற்றி வருகிறது. இதற்கிணங்க, 1967 ஆம் ஆண்டுக்குப் பின் 1972-73 ஆம் ஆண்டு வரை, 24,500 ஹையர் கிரேடு பதவிகள் செகண்டரி கிரேடு பதவிகளாக உயர்த்தப்பட்டுள்ளன. 1973-74 ஆம் ஆண்டுக்கு, 1—10—1973 முதற்கொண்டு மேலும் 5,000 புதிய செகண்டரி கிரேடு பதவிகளுக்கு ஒப்பளிப்பு வழங்கப் பட்டுள்ளது. ஆக மொத்தம் 29,500 செகண்டரி கிரேடு பதவிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இதற்குப் பின்பும் ஏறத்தாழ 4,000 ஹையர் கிரேடு ஆசிரியர்கள், செகண்டரி கிரேடு தகுதி பெற்றிருந்தும், செகண்டரி கிரேடு பதவி இல்லாத காரணத்தால் ஹையர் கிரேடு பதவியிலேயே தொடர்ந்து பணியாற்றும் நிலை இருக்குமென்று மதிக்கப்பட்டுள்ளது. இந்த 4,000 ஆசிரியர் களுக்கும் 2—10—1973 முதல் செகண்டரி கிரேடு பதவிகளை அனுமதித்து, அவர்களுக்குப் பதவி உயர்வளிக்க அரசு முடிவு செய்துள்ளது. பெரும் செலவைப் பொருட்படுத்தாமல் இந்நிலை யிலுள்ள ஆசிரியர்களுக்கு ஊக்கமளிக்கும்பொருட்டு, இந்த ஆண்டு 2—10—1973 முதல் வழங்கப்பட்டுள்ள 5,000 புதிய செகண்டரி கிரேடு பதவிகளுக்கு மேலாக மேலும் 4,000 பதவிகளுக்கு ஒப்பளிப்பு வழங்க அரசு முன்வந்துள்ளது.

தொடக்கப் பள்ளியில் தலைமை ஆசிரியர்களாகப் பணியாற்று வோரை பொறுத்தவரை, தலைமையாசிரியர் உட்பட 4 ஆசிரியர்கள் பணியாற்றும் பள்ளிகளில், தலைமையாசிரியர் படியாக மாதம்

5 ரூபாய் வழங்கப்பட்டு வருகின்றது. இந்த விதியைத் தளர்த்தி தலைமையாசிரியர் உட்பட 3 ஆசிரியர்கள் பணியாற்றும் பள்ளி களிலுள்ள தலைமையாசிரியர்களுக்கும் தலைமையாசிரியர் படியாக மாதம் ரூபாய் 5, 2—10—1973 முதல் வழங்கப்படும்.

தொடக்கப் பள்ளிகளில் தலைமையாசிரியர்களாகப் பணி யாற்றும் சில பிரிவினருக்கு இப்பொழுது தலைமையாசிரியர் படி தனியாக வழங்கப்படுவதில்லை. அவர்களுக்கும் தலைமையாசிரியர் படியை 2—10—1973 முதல் தனியாக வழங்க அரசு இப்பொழுது முடிவு செய்துள்ளது.

நான் அறிவித்துள்ள இந்த 3 சலுகைகளாலும் அரசுக்கு ஆண்டுதோறும் இலட்சக்கணக்கில் செலவாகின்றபோதும், இந் நிலையில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு மேலும் ஊக்கமளிக்கும் பொருட்டு இச்சலுகைகளை வழங்க அரசு முன்வந்துள்ளது. இவற்றை ஆசிரியர் சமுதாயமும் ஆசிரியர் நலனில் அக்கறை உள்ளவர்களும் வரவேற்பார்கள் என்று நம்புகிறேன். (ஆரவாரம்.)

(6) அமைச்சரவையின் மீது நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கும் தீர்மானமும், அமைச்சரவையின் தனி ஒரு கொள்கையைக் கண்டிக்கும் தீர்மானமும்.

THIRU B. VENKATASWAMY: Sir, I move "That this House expresses its want of confidence in the Council of Ministers headed by Hon. Dr. M. Karunanidhi."

THIRU R. PONNAPPA NADAR: Sir, I second the motion.

திரு. கே. டி. கே. தங்கமணி: தலைவர் அவர்களே, "வாழ்க்கைக்குத் தேவையான இன்றியமையாப் பொருட்களின் விலை உயர்வுக்கு வழிவகுத்து, உணவு நெருக்கடிக்கு இடமளித்து, இவை காரணமாக மாநிலமெங்கும் கிளர்ச்சியை உருவாக்கியுள்ள இந்த அமைச்சரவையின் கொள்கைக்கு இப்பேரவை எதிர்ப்புத் தெரிவிக்கிறது." என்ற தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: Sir, I second the motion.

THIRU B. VENKATASWAMY: Sir, I have moved the no-confidence motion against the Ministry headed by Dr. M. Karunanidhi because the people of Tamil Nadu have lost